# 3

# புரட்சிக் கவிஞரின் நகைச்சுவை

டாக்டர் அரங்க. இராமலிங்கம்

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் தமக்கென்றதோர் தனியிடத்தைத் தம் தகுதியால் தக்கவைத்துக் கொண்டவர் புரட்சிக்கவிஞர். பாட்டுக்கு வேந்தராகப் பலர் இருக்கலாம்; ஆனால்; புரட்சிக்கு இலக்கிய வழியாக வித்திட்டவர் பாரதிதாசன் ஒருவரே! எனவேதான் தமிழிலக்கிய வரலாற்றில் புரட்சிக்கவிஞர் எனப் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பெறுகிறார். தீண்டாமை, பெண்ணடிமை, குழந்தை மணம், பொருந்தா மணம், சாதி, சமயம் ஆகியவற்றைக் கடுமையாகத் தாக்கினார். விதவை மணம், காதல்மணம், பெண்ணுரிமை, பெண்விடுதலை, பெண் கல்வி எனப் பெண்களுக்காக மிகுதியாகக் குரல் எழுப்பிய முதன்மைக்கவிஞர். இவ்வாறு மக்கள் கவிஞராக மலர்ச்சி பெற்ற புரட்சிக் கவிஞரிடம் நகைச்சுவை உணர்வும் மிகுந்திருந்தது.

நகைச்சுவை ஒன்பான் சுவைகளுள் ஒன்று. காலம், இடம், வயது. அனுபவம் இவற்றிற்கு ஏற்ப நகைச்சுவை உணர்வு ஒருவர்க்கு ஒருவர் வேறுபடும். சான்றாகச் சிறுவர்கள் தங்களுக்குள் ஒலியெழுப்பிக் கொண்டு ஓடிப்பிடித்து விளையாடுவர். அவ்வாறு ஓடும்பொழுது ஒரு சிறுவன் கல் தடுக்கி கீழே விழுந்து விட்டால் அவனைக் கண்டு மற்ற சிறுவர்கள் நகைப்பர். ஆனால் அதே காட்சியினைக் காணும் பெற்றோரும் மற்ற பெரியோரும்

"அய்யோ குழந்தை விழுந்து விட்டதே'' எனத் துன்பத்தால் துடிப்பர். நிகழ்வு ஒன்றுதான். ஆனால் ஒவ்வொருவரின் மனநிலைக்கு ஏற்ப சுவைகள் வேறுபடுவதை உணரலாம், எனவே நகைச்சுவை அவரவரின் மனநிலைக்கு ஏற்ப உணரப் படும் தன்மையது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இரு நிலைகளில் நகைச் சுவையினைப் பயன்படுத்தியுள்ளார். சிரிப்புக்காக என ஒரு நிலையிலும் சிந்தனைக்காக எனப் பிறிதொரு நிலையிலும் நகைச்சுவையினைக் கையாண்டுள்ளார். அங்கத நிலையில் கவிஞர் படைத்த படைப்புகள் முழுமையும் சிந்தனைக்காகப் படைத்தவை எனலாம்.

சிரிப்புக்காக நகைச்சுவை உணர்வினைக் கவிஞர் மிகுதி யாகவே படைத்துள்ளார். ஆலமரத்தில் தொங்கிய பாம்பைக் குரங்கொன்று விழுதென்று நினைத்துப் பிடித்து விடுகிறது. பிடித்த பின்னர்ப் பாம்பென்று அறிந்ததும், அதனை விட்டுவிட்டு அச்சத்தால் மரத்தின் எல்லா கிளை களிலும் தாவித் தாவிச் சென்று இறுதியில் தன் வாலைப் பார்த்து அஞ்சி நடுங்குகிறது. குரங்கின் இச்செயலைச் சுவைபட எடுத்துரைத்துள்ளார் கவிஞர்.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சி போய்த் தன்வால் பார்க்கும்[1]

''விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கென குதித்ததைப் போல'' குரங்கு குதித்ததையும் தன் வாலையே ஒளிப் பாம்பாய் எண்ணி மருள்வதையும் புரட்சிக் கவிஞர் நகைச் சுவையோடு எடுத்துரைத்துள்ளார்.

குடும்ப விளக்கில் மாமியாருக்கும் மருமகளுக்கும் நடக்கும் உரையாடல் சுவை பயக்கின்றது. "புளி அடைத்திருக்கும் பானையில் அதைக் கவர்ந்துண்ணும் பூச்சிகளுக்கும் கால் வைக்க இடமிராதே, அதுபோல் நிரம்பப் பொருள்களை ஏற்றிய வண்டியிலே எப்படி அமர்ந்து வந்தீர்கள்? என மருமகள் கேட்டதற்கு மாமியார் இறுக்கும் விடையாகக் கவிஞர்.

இவைகளின் உச்சி மிதில்
குன்றுமேல் குரங்கு போல
என்றனைக் குந்த வைத்தார்
என் தலை நிமிர வண்டி
மூடிமேல் பொத்தலிட்டார்
உன்மாமன் நடந்து வந்தார்
ஊரெல்லாம் சிரித்த தென்றாள்[3]

எனக் குறிப்பிடுவது பெரு நகைப்பை ஏற்படுத்துகிறது.

'இருண்ட வீடு' காப்பியம் எள்ளல் சுவை நிரம்பியதாகும். 'குடும்ப விளக்கு' காப்பியத்தினைப் படைத்தளித்த கவிஞர் எதிர்மறை நிலையிலும் தம் கருத்தினை வலியுறுத்துவதற்கு இருண்ட வீடு காப்பியத்தினைப் படைத்துள்ளார். இக் காப்பியத்தில் உலாவரும் மாந்தர் அனைவரும் அறியாமையின் வார்ப்புகளாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளனர். அறியாமை காரணமாக வீடு இருண்டு கிடக்கிறது. இக் காப்பியத்தில் வரும் பெரிய பையன் காலைக்கடன் முடிக்காமல் பிட்டையும் வடையையும் ஆவலாய் உண்ணத் தொடங்குவது முதல் இரண்டு பற்களை இழப்பது வரை,

நாவில் இடுகையில், நடுவயிறு வலித்தது
வெளிக்குப் போக வேண்டுமென் றுணர்ந்தான்
வடையின் சுவையோ விடேன்விடேன் என்றது
கொல்லையை நோக்கிச் செல்லவும் துடித்தான்

மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்
வில்லம்பு போல மிக விரைவாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபடவென்று பானையைத் தள்ளிக்
கன்றின் கயிற்றால் கால்தடுக் குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்கள் எங்கேயோ போட்டுப்
புரண்டெழுந் தோடிப்போனான் கொல்லைக்கு[3]

எனக் குறிப்பிடுவது பெருநகைப்பை ஏற்படுத்துகிறது. புரட்சிக் கவிஞரிடம் நகைச்சுவை உணர்வு இயல்பாக அமைந்திருப்பதற்கு இப் பாடல் வரிகள் சான்று பகர்கின்றன.

தம்முடைய புரட்சிக் கருத்துகள் மேலும் வலிமை பெறும் பொருட்டு எள்ளல் நிலையில் நகைச்சுவையாகக் கருத்துக்களைக் கூறுவதிலும் புரட்சிக்கவிஞர் வெற்றி பெற்றுள்ளார். தேவலாயத்தைச் சார்ந்த பாதிரியார் உடல் அழகை விட உள்ளத்தின் அழகே உண்மையான அழகு என்பதை மக்களுக்கு உணர்த்த நினைத்தார். விலை குறைந்த தூய்மையான ஆடைகளை அணிந்தும், நகை அணியாமலும் பெண்கள் தேவாலயத்திற்குள் வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். பாதிரியாரின் வேண்டுகோளினால் தேவாலயத்தை நஞ்செனவெறுத்தனர் பெண்கள். பெண்கள் ஆலயத்திற்கு வரவில்லை. அதனால் ஆண்களும் வரவில்லை. பாதிரியார் மட்டுமே ஆலயத்தினுள் இருந்தார். இந்நிலையினைக் கண்ட பாதிரியார் அடுத்த நாளே அறிவிப்புப் பலகையில் பின்வருமாறு எழுதலானார். ஆலயத்திற்கு வருபவர்கள் நிறைய நகை அணிந்து வரலாம்; அது மட்டுமன்றி ஆடம்பரமாக ஆடையும் அணிந்து வரலாம் என எழுதினார். அனைவரும் அவரவர் அழகைப் பார்த்துக் கொள்வதற்கு முகம் பார்க்கும் கண்ணாடியும் உண்டு எனவும் அறிவித்தார். அடுத்த நாள் முதல் கூட்டம் மிகுதி

யாக வர ஆரம்பித்தது. ஆலயத்திற்கு எல்லோரும் வந்தார்கள். ஆனால் யார் வரவேண்டுமோ அவர் வரவில்லை இதனை,

நிலைகண்ட பாதிரி பின் எட்டுறுப் பேயன்றி
    நீள் இமைகள், உதடு, நாக்கு
நிறைய நகை போடலாம்; கோயிலில் முகம்பார்க்க
    நிலைக்கண்ணாடியும் உண்டென
இலை போட் டழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள்
    எல்லோரும் வந்து சேர்ந்தார்
ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே,
    இனிய பாரத தேசமே[4]

என நகைச்சுவையோடு குறிப்பிட்டுள்ளார் கவிஞர், ஆலயத்தின் நோக்கம் என்ன! மக்கள் எதற்காக ஆலயம் செல்ல வேண்டும், எப்படிச் செல்ல வேண்டும் என்பதை யெல்லாம் நேரடியாக இடித்துரைக்காமல் எள்ளல் நிலையில் சுவைபடக் கூறியுள்ளார்.

சமுதாய விடுதலையைப் போற்றியுரைத்த புரட்சிக் கவிஞர் நாட்டு விடுதலையையும் போற்றியுரைத்துள்ளார். தங்களுடைய தாய்நாட்டின் விடுதலைச் செய்தி ஆணுக்கும் பெண்ணுக்கும் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகக் கவிஞர் காட்டுகிறார். நமது நாட்டு மக்கள் முழு உரிமை பெற்றவ ராய்த் தன்மானம் உடையவராய் வாழ்தல் வேண்டும் எனும் விருப்பம் உடையவர் புரட்சிக் கவிஞர். தாய்நாட்டின் விடுதலைச் செய்தியினைக் கேட்டவுடன் எண்ணாமல் இருபது முத்தம் கொடுத்த பெண்ணின் செயலைப் பின்வரு மாறு கவிஞர் சுவைபடக் காட்டுகிறார்.

இப்படி, 'ஒன்று வை' என்றான் ஒருசேய்
அப் பாவை, முத்தம் அளியா திருந்தாள்
நமக்கு விடுதலை நல்க அரசன்

வருகின்றானே தெரிவையோ; என்னலும்
இருபது முத்தம் எண்ணாது அளித்தாள்[5]

எண்ணாமல் முத்தம் அளித்தாள் எனக் கூறும் கவிஞர் இருபது முத்தம் என எண்ணிக்கையையும் கூறுகிறார். அவசர அவசரமாக அளிக்கப்பெற்ற முத்தத்தை அருகிருந்து கவிஞர் எண்ணினாரா? தெரியவில்லை. எது எப்படியிருப்பினும் விடுதலை உணர்வைச் சுவைபட வெளிப்படுத்தியிருக்கும் கவிஞரின் திறம் போற்றுதலுக்குரியது. பிறிதோரிடத்தில் தாய்நாட்டின் விடுதலைச் செய்தி கிழவிக்கும் உணர்வைத் தருவதாகக் கவிஞர் காட்டுகிறார். ''தண்டூன்றும் முதியோரே! தமிழ்த் தொண்டென்றால் இளமைதனை எய்தீரோ'' எனக் குரல் எழுப்பியவர் புரட்சிக் கவிஞர். விடுதலைச் செய்தியினைக் கேட்டு வலிமையினைப் பெற்ற கிழவியின் நிலையினைப்,

பல்லிலாக் கிழவி கல்லுரல் இட்ட
மெல்லிலை காயினை மெல்ல இடிக்கையில்
விடுதலைச் செய்தி விளம்புதல் கேட்டதால்
தடதட என்றே இடிபட்டது கல்[6]

எனக் குறிப்பிடுவது நகைப்பை ஏற்படுத்துகிறது.

பாடல்கள்வழி மட்டுமின்றி நாடகம், கதைகள் வாயிலாகவும் நல்ல கருத்துகளைப் புரட்சிக்கவிஞர் புலப்படுத்தியுள்ளார். கவிஞரின் கற்கண்டு. படித்த பெண்கள் ஆகிய நாடகங்கள் நகைச்சுவையோடு நல்ல கருத்துகளைக் கூறும் நாடகங்களாகும். கவிஞரின் கதைகள் முழுக்க முழுக்க அங்கத நிலையில் மூடப்பழக்க வழக்கங்களைச் சாடும் போக்கின. "நானே கிண்டல்காரன்தானே? என்னை விட்டுக் கிண்டல் எப்படித் தொலையும்" எனத் தம்மைக் கிண்டற்காரன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு கதைகளை எழுதியவர்.

கண்ணபிரானைப் பற்றிய சொற்பொழிவு (உபந்நியாசம்) நடக்கிறது. கண்ணன் வாயைக் காட்டியதும் அவன் வாயில் ஈரேழு பதினான்கு உலகங்களும் தெரிவதைத் தாயானவள் நேரில் பார்ப்பதைப் போல் பார்த்தாள். இவ்வாறு சொற்பொழிவாளர் கூறியதும் கூட்டத்திலிருந்து ஒருவர் கேள்வி கேட்கிறார்: "ஏனையா, வாய்க்குள் ஈரேழு லோகங்களும் புகைபோல் தெரிந்தனவா? திருத்தமாகவா!" உடனே சொற்பொழிவாளர்: "முட்டாளே! அசல் உலகங்கள்! உலகத்தில் உள்ள அனைத்தும் ஒன்று விடாமல் தெரிந்தன என்று தாய் ஆச்சரியப்பட்டாள்" எனக் கூறுகிறார். உடன் கேள்வி கேட்டவர் வேண்டுகோள் விடுக்கிறார்: "ஐயா உபந்நியாசகரே! இந்தக் கடிதத்தை அந்த அம்மாவிடம் கொடுத்து தயவுசெய்து (வாய்க்குள் தெரிவதால்) சுலபமாய்ச் சென்னை—பாரிஸ் வெங்கடாசல ஐயர் வீதி நெ 17 வீட்டின் குறட்டில் போட்டுவிடச் சொன்னால் போதும். அவசரமான லெட்டர். ஸ்டாம்பு வாங்கக் காசில்லை" எனப்புராண இதிகாச கருத்துகளை எள்ளி நகையாடுகிறார்.

நகைச்சுவை என்பது இருபக்கமும் கூர்மையுடைய வாள் போன்றது. இலக்கியத்தில் இச்சுவையினைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இது பயன்படுத்துபவரையே ஏளனத்திற்கு ஆளாக்கிவிடும். "மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சியை நல்க வல்ல நகைச்சுவையை நன்மை பயக்கும் சுவையாக மாற்றிக் காட்டியவர் பாரதிதாசன்."[5] வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது போல் நகைச்சுவையைச் சிரிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தாமல் சிந்திப்பதற்கும் சிறந்த கருத்துகளைப் பெறுவதற்கும் பயன்படுத்தி வெற்றி பெற்றவர் புரட்சிக் கவிஞர்.

## குறிப்புகள்

1. அழகின் சிரிப்பு, பக். 40.
2. குடும்ப விளக்கு 1, பக். 14.
3. இருண்ட வீடு, பக். 7.
4. பாரதிதாசன் கவிதைகள் 1, பக். 182.
5. காதலா கடமையா? பக். 17.
6. காதலா கடமையா? பக். 17.
7. பாரதிதாசன் கதைகள், பக். 67.
8. பாரதிதாசன் கதைகள் பக். 100.
9. அரங்க இராமலிங்கம், பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை, பக். 116.